மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்தப் பிரச்சினை 1966-லிருந்து, தென்னிந்திய மில் சொந்தக்காரர்கள் சார்பில் சொல்லப்பட்டு வருகிறது. தொழிலாளர்கள் சார்பில், விலைவாசிகள் இருக்கும் நிலையில், பஞ்சப்படி குறைக்கப்பட்டால் வாழ்க்கை பாதிக்கப்படும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. மில் ஓனர்கள் சார்பில் தொழிலில் மந்தம் ஏற்பட்டிருக்கிறது, பொருள்கள் தேக்கம் ஏற்பட்டிருக்கிறது என்று வாதம் செய்யப்படுகிறது. அதைப்பற்றி இரண்டு தரப்பினரும் தொடர்ந்து பேச்சு வார்த்தை நடத்தி முடிவு காண வேண்டும்.

திரு. என். வரதராஜன்: தலைவர் அவர்களே, பொதுவாக கடந்த 10 ஆண்டுக் காலமாகவே, விலைவாசிப் புள்ளி உயர்ந்து கொண்டே போய், சராசரி லாப விகிதமும் ஒரே மாதிரி இருக்க வில்லை. ஆகவே, பஞ்சப்படி அதிகமாக அளிக்க வேண்டும் என்ற வாதத்தையும் சமீபத்திலே மத்திய அமைச்சர் திரு. மொரார்ஜி நிராகரித்திருக்கிறார்கள் என்பதை அரசு அறியுமா? பேச்சு நடத்த அடிப்படை வேற்றுமை அதுதான் என்று ஏற்றுக்கொள் ளுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கேள்வியிலேயே பதில் இருக் கிறது. வாழ்க்கைப் புள்ளி உயர்வால் சராசரி லாபம் அப்படியே இருக்கவில்லை. அதுதான் அதற்குப் பதில்.

Erskine Hospital at Madurai

* 345 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR. Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether the attention of the Government has been drawn to the criticism in the Municipal Council, Madurai, about the administration of the Erskine Hospital; and

(*b*) the action taken thereon?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) கேள்வியின் இந்த உட் பிரிவில் கூறப்பட்டிருக்கும் குற்றச்சாட்டு அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை. அது அரசின் பார்வைக்கு வரும்பொழுது ஓர் ஊராட்சி மன்றம் அவ்வாறு குற்றம் சாட்டுவது ஒழுங்குதானா என்பது பரிசீலனை செய்யப்பட வேண்டும்.

(இ) இந்தக் கேள்விக்கு இடமில்லை.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் : உதவித் தலைவர் அவர்களே, எர்ஸ்கின் ஆஸ்பத்திரி மதுரை மக்களுக்கு மிகவும் அவசியமானது என்பதால், அந்த ஆஸ்பத்திரிக் குறைகளை மதுரை முனிசிபாலிடியார் அரசாங்கத்திற்குத் தெரிவித்திருப்பதை சபைக்கு வைக்க முன் வருவார்களா ? மதுரை ஆஸ்பத்திரிக் குறைகளை உடனடியாகத் தீர்ப்பதன் மூலமாக, தமிழ் நாட்டில் எல்லா ஆஸ்பத்திரிகளின் குறைகளையும் தீர்க்கப்பட்டதாக இருக்கும். ஆகவே, அந்தக் குறைபாடுகளைத் தீர்க்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

1968 மார்ச் 27]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஏற்கனவே நான் குறிப்பிட்டது போல, மதுரை நகராட்சி மன்றம் அரசாங்கத்தின் கவனத்திற்கு எந்த விதமான குற்றச்சாட்டுகளையும் கொண்டுவரவில்லை. கனம் உறுப்பினர் குற்றச்சாட்டுகள் ஏதாவது இருந்து, அதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும்.

உயர்நிலைக் குழுவின் அறிக்கை

* 322 வினா.—திரு. கரு. சீமைச்சாமி:
திரு. கே. வினாயகம் :
திரு. வி. கே. கோதண்டராமன் :
திரு. ஆ. கு. சுப்பையா :
திரு. க. இராமமூர்த்தி :
திரு. என். சங்கரய்யா :
திரு. எ. சிதம்பரநாத நாடார் :
திரு. க. கோமதிசங்கர திட்சிதர் :
திரு. சி. கோவிந்தராசன் :
} மாண்புமிகு

முதலமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசாங்கம் ஏற்படுத்தி இருக்கும் உயர்மட்ட கமிட்டி (High Power Committee) அளித்திருக்கும் பரிந்துரைகளின் விபரங்கள் யாவை ?

(இ) அவற்றுள், எத்தனை பரிந்துரைகள் இதுவரை செயலாக்கப்பட்டிருக்கின்றன?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : (அ) & (இ) இது பற்றி சபைமுன் விவர அறிக்கை [a] ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. கரு. சீமைச்சாமி : தலைவர் அவர்களே, சிக்கன-நிர்வாகச் சீரமைப்பு உயர்நிலைக் குழு குறிப்பிட்ட 13 பரிந்துரைகளைச் சொல்லியிருக்கிறது. அவைகளில் எதை எதை அரசாங்கம் ஏற்று நடத்தியிருக்கிறது ? இதனால் நிர்வாகச் செலவு எவ்வளவு மிச்சமாகியிருக்கிறது ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : விரிவான அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கின்ற பரிந்துரைகளில் எவை எவைகளைச் செயல்முறைக்குக் கொண்டுவர முடியுமோ, அவைகளில் நடவடிக்கைகள் மேற்கொள்ள அரசு ஈடுபட்டிருக்கிற தென்பதையும், இனியும் ஈடுபடும் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

THIRU K. VINAYAKAM : Sir, since the subjects considered by the High Power Committee are so important and the remedies suggested by them are also very revoluntionary in character and since the Government have partially accepted those recommendations for execution, will the Chair be pleased to allot half-hour for discussion on this matter?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வி கேளுங்கள்.

---

[a] 333-360-ம் பக்கங்களில் I,I-அ இணைப்புகளாக அச்சிடப்பட்டுள்ளது.